# யோவான் உலகத்தின் முடிவைப் பார்த்தார்

**ஜெபம் :** அன்பான கர்த்தாவே, உமது பிள்ளைகள் பரலோகத்தைப் பற்றிய வாக்குத்-தத்தத்தை போற்றும்படியாக உதவி செய்யவும்.

(இந்த குழந்தைகளின் செயல்பாட்டில்) குழந்தைகளின் தேவைக்கும், ஆவிக்குரிய புரிந்து-கொள்ளுதலுக்கும் ஏற்ற எதையாகிலும் தெரிந்து கொள்க.

கடைசி காலங்களில் பூமியிலும் பரலோகத்திலும் என்ன நடக்கும் என்று தேவன் யோவானுக்குக் காட்டிய தரிசனத்தை வெளிப்படுத்தின விசேஷம் 20:11-21:4, 21:22-22:5 ஆகிய பகுதிகளில் இருந்து **ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ வாசிக்கலாம்** அல்லது மனப்பாடமாகக் கூறலாம்.



*தம்மை நம்பும் ஒவ்வொரு குழந்தையையும் வரவேற்க ஆயத்தமாக இயேசு நிற்கிறார்*

- இந்தக் கேள்விகளைக் கேட்கவும் (ஒவ்வொரு கேள்விக்கும் பின்னால் பதில்)
- இறந்து போன மக்கள் யாவருக்கும் என்ன நடந்தது? *(வெளி 20:12).*
- ஜீவ புத்தகத்தில் பெயர் இல்லாதவர்களுக்கு என்ன நடந்தது? *(20:15)*
- நமது வீடாகிய புதிய எருசலேம் எவ்வாறு இருக்கும்? *(2:12)*
- பரலோகத்தில் ஒருபோதும் நிகழாத விஷயங்கள் எவை? *(21:4)*
- ஆலயமோ, சூரியனோ, சந்திரனோ ஏன் இல்லை? *(21:22-23)*
- அந்தப் பட்டிணத்தின் மாபெரும் தெருவின் மத்தியில் இருந்த இரண்டு விஷயங்கள் எவை? *(22:1-2).*

### மீள் பார்வை

- பரலோகத்தில் நாம் என்ன காண்போம்? *(தேவன், ஒரு வெள்ளை சிம்மாசனம், புத்தகங்கள், இயேசு, ஒளி, இறந்து போன மக்கள், ஓர் அழகிய நகரம், ஓர் ஆறு, ஜீவ விருட்சம்)*
- பரலோகத்தில் நாம் காணமுடியாதவை எவை? *(மரணம், நகரம், அழுகை,இரவு, சூரியன், சந்திரன், பாவம், நோய்)*

## 1. பரலோகத்தைப் பற்றிய யோவானின் தரிசனத்தின் சில பகுதிகளை நாடகமாக்குதல்

- ஆராதனைத் தலைவருடன் பேசி பிள்ளைகள் இந்த நாடகத்தை அரங்கேற்ற **ஏற்பாடு செய்க.**
- உங்கள் போதனை நேரத்தை இந்த நாடகத்தை ஆயத்தமாக்க செலவிடுக.
- எல்லா பகுதிகளையும் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.
- **பெரிய பிள்ளைகள்** சிறியவர்களுக்கு உதவி செய்யவும்.

- **சுவிசேஷகர், கதை கூறுபவர்** ஆகிய பாத்திரங்களைப் பெரிய பிள்ளைகளோ பெரியவர்களோ ஏற்கலாம்.
- நண்பர்கள் வேடத்தை **இளம் பிள்ளைகள்** ஏற்கலாம்.

**கதை கூறுபவர் :** வெளி. 20:11-15 ல் இருந்து தரிசனத்தின் முதல் பகுதியைக் கூறவும்.பின் கூற வேண்டியது, "ஒரு சுவிசேஷகர் தமது நண்பனிடம் கூறுவதைக் கேளுங்கள்."

**சுவிசேஷகர்** : நான் வெளிப்படுத்தின விசேஷத்தை படித்துக் கொண்டிருக்கிறேன். வரும் காலத்தில் வெள்ளை சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் தேவனை நாம் காண்போம்.

**நண்பர் #1:** தேவன் யாவர்மேலும் அன்பாய் இருக்கிறார். அவர் எல்லோரையும் பரலோகத்திற்குள் அனுமதிப்பாரா?

**சுவிசேஷகர்** : ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ள விசுவாசிகளே பரலோகத்திற்குள் செல்வார்கள்.

**நண்பர் #2** : நான் இயேசுவை நேசிக்கிறேன். ஆனாலும் சில வேளைகளில் மோசமான விஷயங்களை செய்கிறேன். பரலோகத்தில் நான் இனிமேலும் பாவம் செய்வேனா?

**சுவிசேஷகர்** : இல்லை, தேவன் உன்னை மாற்றுவார். நாம் செய்வது எல்லாவற்றையும் அவர் புத்தகத்தில் எழுதுகிறார். நமது மோசமான செயல்கள் நியாயம் தீர்த்து விட்டுவிடப்படும். நாம் செய்த நல்ல செயல்களுக்கு தேவன் பலன் அளிப்பார்.

**நண்பர் #3:** இயேசு மறுதலிக்கும் மக்களுக்கு என்ன நடக்கும்?

**சுவிசேஷகர்** : ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள் அக்கினி ஏரியில் தள்ளப்படுவார்கள்

**நண்பர் #3:** என் பெயரை இயேசு ஜீவ புத்தகத்தில் எழுத வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**கதை கூறுபவர் :** வெளி. 21:1-4 ல் இருந்து தரிசனத்தின் இரண்டாவது பகுதியைக் கூறவும் பின், "சுவிசேஷகர் தமது நண்பனிடம் கூறுவதைக் கேளுங்கள்."

**சுவிசேஷகர்** : ஒரு மகிழ்ச்சியான அழகிய மாணவாட்டியைப் போல பரலோகம் மிகவும் அழகானது

**நண்பர் #4** : பெரும்பாலும் தேவன் என்னை உள்ளே விடமாட்டார். என் வாழ்க்கையில் அதிக பிரச்சினைகளும் வேதனைகளும் இருக்கின்றன.

**சுவிசேஷகர்** : தேவன் உங்களுடைய எல்லா துயரத்தையும் வேதனையையும் அகற்றுவார். வாழ்க்கையின் எல்லா கெட்ட விஷயங்களும் விட்டு விடப்படும்.

**நண்பர் #4** : வேதனை இல்லாத இடத்திற்கு நான் போக விரும்புகிறேன்

**கதை கூறுபவர் :** வெளி. 21:22-22:6 வரை உள்ள மூன்றாம் பகுதியைக் கூறவும். பின் "நண்பன் என்ன சொல்லுகிறான் என்பதைக் கேளுங்கள்."

**நண்பன் #5** : பரலோகத்தில் தேவனை ஆராதிக்கும் ஆலயம் பெரியதாக இருக்குமா?

**சுவிசேஷகர்** : இல்லை. அங்கு ஆலயம் கிடையாது. தேவன் நம்மோடு வாழ்வார். அவரே நமது ஆலயம். அவரது மகிமை மிகுந்த ஒளியைத் தருவதால் சூரியனும் சந்திரனும் தேவை இல்லை.

**நண்பன் #5** : அப்படியானால் அங்கு மரங்களும் ஆறுகளும் இருக்காது

**சுவிசேஷகர்** : அங்கு ஜீவ தண்ணீர் ஓடும் அழகிய நதி உண்டு. பரலோகத்தின் மத்தியில் ஜீவ விருட்சம் உண்டு.

**எல்லா நண்பர்களும்:** நாங்கள் அங்கே போக விரும்புகிறோம். இயேசுவோடு இருக்க விரும்புகிறோம். இயேசுவின் நாமத்தை என்றென்றும் போற்றுவோம்.


**கதை கூறுபவர் :** நாடகத்தை அரங்கேற்ற உதவிய யாவருக்கும் நன்றி கூறல்.

**கேள்விகள்** : பெரியவர்களுக்காகப் பிள்ளைகள் இந்த நாடகத்தை வழங்கினால், மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் சிறுவர்கள் பெரியவர்களிடம் கேட்கவும். பரலோகத்தில் வேறு எவற்றை அவர்கள் எதிர் நோக்குகிறார்கள் என்பதையும் கேட்கலாம்.

**கவிதை** : வெளி. 19:6, 7, 8 ஆகிய வசனங்களை மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

**படம்** : பரலோகத்தில் வளரும் ஜீவ விருட்சத்தின் படத்தை எளிமையாக சிறுவர்கள் வரையட்டும்.

**சிறுவர்கள்** தாங்கள் வரைந்த படத்தை ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கு காட்டி பரலோகத்தில் தேவனிடம் இருந்து அவரது ஜீவ விருட்சத்தின் மூலமாக ஆரோக்கியம் வரும், என்று விளக்கம் அளிக்கலாம்.



தேவனின் கடைசி நியாயத்தீர்ப்பையும் பலலோகத்தையும் பற்றி **பெரிய குழந்தைகள்** கவிதையோ பாடலோ எழுதவும்.

பெரிய பிள்கைள் வெளி. 21:3-4 ஐயும் சிறுவர்கள் வசனம் 4 ஐயும் **மனனம் செய்க.**

**ஜெபம் :** "அன்பான இயேசுவே ! யோவான் அப்போஸ்தலருக்கு பரலோகத்தைப் பற்றிய தரிசனத்தைக் கொடுத்ததற்காக நன்றி செலுத்துகிறோம். நாம் எதிர்காலத்தைப் பற்றி பயப்பட வேண்டாம். இயேசு பாவத்தையும் மரணத்தையும் வெற்றி கொள்வார். பலலோகம் அழகானது. உமது முகத்தைப் பார்த்து நாங்கள் என்றென்றும் வாழ்வோம்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net